Registered No. M-4433. Madras War Review (TAMIL) 21-7-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-௵ ஜூலை ௴ 21௳, வெள்ளிக்கிழமை இதழ் 46

அட்மிரல் மௌண்ட் பேட்டன்.

எனது உறுதியான நம்பிக்கை

உங்கள் போர் முனையில் உங்கள் படையினரின் சிறந்த போருணர்ச்சியையும் உயரிய வீரத்தையும் நான் பார்த்தேன். உங்கள் உணர்ச்சியைப் பாராட்ட வேண்டு மென்று விரும்புகிறேன். கடுமையாகப் போராடிய படைகளைக் கொண்டு, சென்ற நான்கு மாதங்களாகப் பெரும் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். ஜப்பானியர்கள் அடைந்த மாபெருந் தோல்விகளுக்குக் காரணம், எதிரியை நீங்கள் கடுமையாக நஷ்டப்படுத்தியது தான். மிகச் சிறந்த போராடுந் தன்மைகளை நான் உங்களிடம் கண்டேன். ஜப்பானியப் படைகளை அடியோடு நாசப் படுத்தும் வரை, நீங்கள் முன்னேறிப் போவீர்கள் என்னும் உறுதியான நம்பிக்கை எனக்குண்டு.

அட்மிரல் மௌண்ட் பேட்டன்,

ஜூலை மாதம் 15-ம் தேதி தன் படைகளுக்கு விடுத்த செய்தி.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : அட்மிரல் மௌண்ட் பேட்டன் ..	1	பர்மாவில் இந்திய விமானப் படை	7
எனது உறுதியான நம்பிக்கை	1	பொது மக்கள் யுத்தம்-சேமிப்பு	8
முரசொலி	2	நான் ஒரு ஜெர்மானியனுக இருந்தால்....? ..	10
தலையங்கம் : பர்மா போர்முனை	3	யுத்த நாட் குறிப்புக்கள்	12
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	வானொலி நாட் குறிப்புக்கள்	12
படங்கள் : காட்டுப் பயிற்சிப் படைகளுக்கு பிரதம படைத் தலைவர் விஜயம்	6		

முரசொலி

"நாம் இப்போது ஈடுபட்டிருக்கும் ஈடில்லாத போராட்டத்தின் கொடுமையான பகுதி இனிமேல் தான். நமக்குக் கிடைக்கப் போகும் வெற்றியை நாம் அடையுமுன்னதாக, நேசநாடுகள் மகா கடுமையான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும்; மகத்தான தியாகங்களைப் புரியவேண்டும்.

—மிஸ்டர் ரூஸ்வெல்ட்—ஜுலை மாதம் 12-ம் தேதி கூறியது.

* * * * *

"இன்னும் சில மாதங்களில் மேற்கே நடைபெறும் போராட்டம் மகத்தான உச்ச நிலையை அடையும்."

—ஜெனரல் ஸ்மட்ஸ்—ஜுலை மாதம் 13-ம் தேதி ஒலிபெருக்கிய சொற்பொழிவில் குறிப்பிட்டது.

* * * * *

"இரண்டு பெருந் தொல்லைகள் ஜப்பானியருக்கு உண்டு. ஜப்பானுக்கு வரும் பொருட்டு, பல விமான நிலையங்கள் கட்டப்படுகின்றன வென்றும், போக்கு வரவுசெய்ய முடியாதப அமெரிக்கக் கப்பற் படை தம் ஏராளமான கப்பல்களை மூழ்கடித்து விட்டன வென்றும் ஜப்பானுக்குத் தெரியும்."

மிஸ்டர் குங், ப்ரெட்டன் உட்ஸ் மகாநாட்டிற்குப் போய் வந்த சீனப் பிரதிநிதி, ஜுலை மாதம் 16-ம் தேதி கூறியது.

* * * *

"இந்த வருஷம் புதிய பிரிட்டிஷ் படைகள் பசிபிக் போர் முனையில் போராடும். ஜெர்மனியைத் தோற்கடித்த பிறகு தான் பிரிட்டிஷாரின் முழு முயற்சியும் இங்கே கிடைக்கு மென்றாலும், இந்த வருஷமே பலமான பெரும் படை அங்கே வந்து சேரும். பிரிட்டிஷாரின் திட்டப்படியே முழு முயற்சியும் நடை பெறுகிறது. சொற்ப கடலாதிக்கமுள்ளவர்கள் ஜப்பானியர்கள். நம் படைகளின் பலம் அதை விடப் பல மடங்கு அதிகமாயிருக்கும். பிரிட்டிஷ் அமெரிக்கத் தரைப் படையும் விமானப் படையும் சேர்ந்து வந்தால், ஹிட்லரைப் போலவே ஜப்பானியரும் கடைசியாகத் தோல்வி யடைய வேண்டியது தான்."

மிஸ்டர் ஜான் கர்ட்டின், ஆஸ்திரேலிய முதன் மந்திரி, பிரதிநிதி சபையில், ஜுலை மாதம் 17-ம் தேதி கூறியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் வருடம் ஜூலை மீ 21உ வெள்ளிக்கிழமை | இதழ் 46

பர்மா போர்முனை

சென்ற ஜூன் மாதம் 24-ம் தேதி மோகாங் பிடிபட்டது. ஜூலை மாதம் 3-ம் தேதி உக்ருல் பிடிபட்டது. இதினின்று பர்மா போர்முனையில் வெற்றி நமக்குத் தான் என்று தெரிகிறதல்லவா? ஜப்பானியர்கள் இந்தியாவில் கால் வைக்க வேண்டுமென்னும் நோக்கங் கொண்டவர்கள். இந்நோக்கம் அவர்களுக்கு ஈடேற வேண்டுமானால், இவ்விரண்டு ஊர்களும் அவர்களுக்கு மிகவும் முக்கியமானவை. கேந்திர ஸ்தானங்கள் என்று கூடச் சொல்லலாம். அன்றியும், மத்திய பர்மாவைப் பாதுகாத்துக் கொள்ளுதற்கு மோகாங் ஒரு சிறந்த தளம்; அது போலவே, உக்ருல் கையை விட்டுப் போனால் இம்பாலும் போனது போலத் தான். திம்மாப்பூர்-இம்பால் ரஸ்தாவில் எதிரி தலையே காட்டமுடியாதோர் நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆனால் இந்த ரோடுக்குக் கிழக்கே ஆங்காங்கே எதிரிகளோடு போராடும்படி நேரலாம். என்றாலும், பெரும் மழை காரணமாக அப்பகுதி வெள்ளக் காடாய்க் கிடக்கிறபடியால், அங்கே மிகுந்த தொல்லைகள் விளைவிக்க அவர்களால் முடியாது. அப்படியே அவர்கள் முன்னேறி வந்தாலும் சிதைக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது.

டாமு-பலேல் பகுதியில், நமது படைகள் பலேலுக்குக் கிழக்கே போராடிக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இம்பாலைத் தாக்குவதற்கு பலேலை ஒரு தளமாகக் கொள்ள வேண்டுமென்று எதிரி கொண்டிருந்த எண்ணத்தைக் கைவிட்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட காரியத்திற்கு மிகவும் உபயோகமாயிருந்த சில முக்கியமான இடங்களை எதிரி கைவிட்டு விட்டான்.

பிஷென்பூர் பகுதியில், சில்சார் ரோடுக்கு வடக்கேயிருந்து எதிரிப் படைகள் பின் வாங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தெற்கே யிருந்தும் எதிரிகள் பின்வாங்கிக் கொள்ளக் கூடும். பிஷென்பூரை யடுத்துள்ள விடங்களில் போராட்டம் நிலையற்றிருக்கிறது. இதைக் கொண்டு, எதிரி எந்த முறையைக் கைக்கொள்ளப் போகிறானென்று அறுதியிட்டுக் கூற முடியாது.

வட பர்மாவில் மோகாங்கைக் கைப்பற்றிய பிறகு, அங்கிருந்து கிழக்கேயும் தெற்கேயும் நம் படைகள் பரவின. கிழக்கேயுள்ள நய்டி என்னும் ரயில்வே ஸ்டேஷனைக் கைப்பற்றின. இதை எதிரிகள் காலி செய்துவிட்டார்கள். அப்போது ஏராளமான பொருட்களை அங்கேயே விட்டுவிட்டுப் போய்விட்டனர். தெற்கே லோய்லோவை அவர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இருதரத்தாரும் தம் படை பலத்தை இப்போது திரட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

மியிட்கியானாவிலும் அதைச் சுற்றிலும் கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. எதிரியின் படை பலம் வெகுவாகத் தளர்ந்துவிட்டது. எதிரி சிப்பாய்கள் நூற்றுக் கணக்கில் மட்டுந்தான் இருக்கிறார்களென்று நம்பத் தகுந்த இடத்திலிருந்து தகவல் கிடைக்கிறது.

இப்படித் திடீரென்று அவர்கள் போர் முனையிலிருந்து பின் வாங்கக் காரண மென்ன?

1. போர் முனைக்கு உதவிப் படைகளையும் தளவாடங்களையும் மேலும் கொண்டு வந்து சேர்ப்பதிலுள்ள கஷ்டங்கள்.

2. இது வரை ஏற்பட்ட பெருவாரியான நஷ்டம். சென்ற மே மாத ஆரம்பத்தில் இம்பால் போர் முனையினின்று திரும்பியதோர் ஜப்பானிய உத்தியோகஸ்தர் கூறிய கருத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். அவர் டோக்கியோ வானொலி நிலையத்திலிருந்து செய்ததோர் பிரசங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார் :—

“கொஞ்சம் பார்லியும் பயறும் மட்டும் தின்று கொண்டு நமது படைகள் போராடிக் கொண்டிருந்த காலத்தில், எதிரிகளுக்கு விமானங்கள் மூலம் சப்ளைகள் வந்து கொண்டிருந்தன. யாருக்கு விமான பலம் குறைவாக இருக்கிறதோ, அவர்கள் போர் முனைக்கு சப்ளைகள் கொண்டு போய்ச் சேர்ப்பது கஷ்டந் தான். ஒரு சமயம் நமது விமானங்களைப் போன்றதோர் விமானத்தைக் கண்டேன். அப்போது நம் படையினர் கொண்ட மகிழ்ச்சியை அளவிட்டுச் சொல்ல முடியாது.”

இதினின்று ஜப்பானியப் படைகளுக்கு சப்ளைகள் வந்து சேருவது மகா கஷ்டம் என்று தெளிவாகத் தெரிகிறது.

இரண்டாவதாக, எதிரிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்ட விவரங்கள் சமீபத்தில் வெளியா யிருக்கின்றன. பர்மா போர் முனையில் போராடிக் கொண்டிருக்கும் நமது படைகள் சென்ற நான்கு மாதங்களில் ஏறக்குறைய 40,000 ஜப்பானியர்களைக் கொன்றிருக்கின்றனர். இவர்களுள் 17,800 பேர்கள் வட பர்மாவில் மட்டும் கொல்லப்பட்டார்கள். இவ்வளவு பெரும் நஷ்டத்தால் ஜப்பானியரின் மனம் பெரிதும் தடமாற்ற மடைந்திருக்கும் என்பது நிச்சயம். பர்மாவிற்குள் சப்ளைகள் அனுப்ப முடியாத காரணத்தால் மட்டு மல்ல. கிழக்கேயுள்ள கடல்களில் ஜப்பானியக் கப்பல்களுக்கு ஏராள

மான சேதம் ஏற்பட்டிருக்கும் காரணத்தாலும், சப்ளைகள் பர்மாவுக்கே வந்து தகுந்தபடி சேர முடிவதில்லை.

வடபர்மாவிலும் மணிப்பூர் பகுதியிலும் எதிரிகள் தோற்று விட்டார்கள் என்று தான் சொல்ல வேண்டும். இங்கே அவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் போல இனி யொரு சந்தர்ப்பம் கிடைப்பதரிது. 1942-ம் வருஷம் மலேயாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் நம்மை விரட்டி பெரும் பீதியை உண்டு பண்ணிக் கொண்டிருந்த ஜப்பானியனல்ல இப்போதுள்ள ஜப்பானியன் என்று நமது படையினர் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். தாம் என்ன தான் தந்திர முறைகளைக் கையாண்டாலும், அவற்றை நாம் வென்று விடுவோ மென்றும், முன் போல பலவீனமாக நாம் இல்லை யென்றும் ஜப்பானியர்கள் இப்போது நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பூரண நம்பிக்கையைக் கொண்டு தான், இப்போதும் மழை காலத்திற்குப் பிறகும் என்ன நிகழு மென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

வெள்ளை ரஷ்யாவில் ஜெர்மன் படைகள் பின் வாங்கியது மட்டுமல்ல ; கிழக்கேயுள்ள அவர்களுடைய மத்தியப் போர் முனை சிதறுண்டு நாசமடைந்தது ; பெரிய ஜெர்மன் படையே நாசமடைந்தது என்று தான் சொல்லவேண்டும். இதுவரை எதிரிகள் பின் வாங்கியது போன்றதன்று இது. இது மிகவும் முக்கியமானது. ஜெர்மன் தோல்விக்கு இது முக்கியமானதோர் அறிகுறியாகும்.

ஜூன் மாதம் 23-ம் தேதி, விடெப்ஸூக்கும் ப்ரிபெட் சதுப்பு நிலங்களுக்கும் இடையே, ஸ்டேலின் தன் மகத்தான தாக்குதலை ஆரம்பித்தபோது, அப்படிப்பட்ட நிலைமையை ஜெர்மானியர்கள் எதிர் பார்த்துக் கொண்டுதானிருந்தார்கள். இது எதனால் தெரிகிறதென்றால், அக்காலத்தில் அந்தப் பகுதியில் ரஷ்யப் படைகள் திரட்டப்பட்டு வந்ததைக் கொண்டு, ஜெர்மன் விமர்சகர்கள் எச்சரித்தும் கொண்டிருந்தார்கள். அப்படியிருந்தும், இங்கே தகுந்தபடி பாதுகாப்புக்களை அமைக்காமல், ஜெர்மன் படைத் தலைவர் உள்ள தளவாடங்களையும் தெற்கே அனுப்பி வைத்தார். இதை விடக் கடுமையான எதிர்ப்பைத் தெற்கே எதிர்பார்த்ததாகத் ஜெர்மனியிலிருந்து கிடைத்த தகவல்களினின்று தெரிகிறது. முதலில் ரஷ்யப் போர்முனையிலிருந்த ஒரு 'பான்சர்' படையினர்தான் கெய்ன் நகரத்தில் பிரிட்டிஷாரோடு கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தது. அன்றியும் வட பகுதியிலிருந்து தென் பகுதிக்கு ஜெர்மன் படைகள் அனுப்பப்பட்டன வென்றும் தெரிகிறது.

வேறு வழி யில்லாத காரணத்தால், விடெப்ஸ்குக்கும் ஷ்லோபினுக்கும் இடையேயுள்ள 'வெடர்லாண்ட்' பலமான அரணில் ஜெர்மானியர் புகலிடங் கொள்ள வேண்டியதாயிற்று. தாக்கவொட்டாதபடி தடுப்பதற்கு பூமியும் ஏற்றதாயில்லை. எனவே முறைப்படி பின்வாங்குவதும் கஷ்டமாயிருந்தது, மின்ஸ்குக்கு எதிரிலுள்ள பாதுகாப்பில்லாத இடத்தை ஜெர்மானியர்கள் காட்டிக் கொடுத்து விட்டார்களென்று சொல்லுவது மிகைப்படக் கூறுவதாகும். முக்கியமான இடத்தில் தகுந்த பாதுகாப்புகளைக் குறைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்ட தென்னமோ உண்மைதான். இதற்குக் கா ணம் வேறிடத்தில் பெரிய ஆபத்துக்கள் தமக்கு நேரக்கூடு மென்னும் அச்சந் தான்.

ஜெர்மன் படைகள் அடைந்த பலாபலன்

நேச நாட்டினர் தம் ஆதிக்கத்தை நிலை நாட்டக் கூடிய நிலைமை ஆரம்பமாகி விட்டது. இதன் பயனாக எதிரி கடைசியில் அழிய வேண்டியது தான். நேச நாட்டுப் படைகளெல்லாம் திரண்டு தம் முழு பலத்தையுங் கொண்டு பல விடங்களிலும் தாக்குவதனால், ஜெர்மன் படைகள் ஸ்தம்பித்துப் போகும்படியான நிலைமை ஏற்படும். இந்த நிலைமையைச் சமாளிக்க ஜெர்மன் தரைப் படைகளால் முடியாது. இது வரை ஜெர்மன் படைகள் தகுந்த பாதுகாப்புக்களோடு, ரஷ்யப் போர் முனையின் ஒரு கோடியினின்று மறு கோடி வரையிலும், டென்மார்க்கிலிருந்து இத்தாலி வரையும் சதா மாற்றப்பட்டுக் கொண்டே வந்தன. நார்மண்டியில் அமைக்கப் பட்டிருந்த அட்லாண்டிக் அரண், கஸ்டவ் அரண், இத்தாலியில் "ஹிட்லர் லைன்" ரஷ்யாவில் "ஹெட்ஜ்ஹாக்" அரண் ஆகிய அனைத்தும் தகர்ந்தன. ஆகவே, ஜெர்மானியர்கள் தம் பாதுகாப்புக்கென அமைத்து வைத்திருந்த அரண்களுக்குள் புகலிடங் கொள்ள முடியாத தோர் நிலைமை ஏற்பட்டு விட்டது. ஜெர்மன் படைகள் சிதைந்து கொண்டு வருகின்றன. ரஷ்யப் படைகள் கிழக்கேயும், தென் கிழக்கேயும், தெற்கேயும், மேற்கேயும் ஊன்றிக்கொள்ளும்போது தான், அதன் முடிவு காலம் நெருங்கும். ரஷ்யத் தாக்குதலை ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியம் எனத்தக்க நிலைமையில் ஜெர்மானியர்கள் இருந்தார்கள். அப்போது மத்திய போலந்திலிருந்தும், பால்டிக் நாடுகளிலிருந்தும், கிழக்குப் பிரஷ்யாவிலிருந்தும் அவர்கள் வெளி யேற்றப்படக் கூடும். அப்போது அவர்களுக்கு விமானங்களோ தளவாட உதவியோ கிடையாது. ஏனென்றால பிரான்சில் மேலும் அதிக ஆபத்தான நிலைமை ஏற்படும் போலிருந்தது லோவிலிருந்து கருங் கடல் வரை இதே பீதிதான் மேவியிருந்தது.

மின்ஸ்க் வீழ்ச்சிக்குப் பிறகு

ரஷ்யப் புதுத் தாக்குதலுக்கும் ஜெர்மனியின் தோல்விக்கும் உள்ள தொடர்பு இந்த அளவில் இருக்கிறது. இப்போது அதனதன் தாராதரத்தைக் கொண்டு ஆராய்வோம். ரஷயப் படைகள் விடெப்ஸ்க், ஓர்ஷர், மொகிலேவ், ரொகசேவ், ஷிலோபின் ஆகிய இடங்களைக் கைப்பற்றிய பிறகு, ரஷ்யப் படைத் தலைவர்களின் போர்த் திட்டம் வெளிப்பட்டது. மின்ஸ்க் நகரத்தின் மீது தான் அவர்கள் முதலில் கண் போட்டார்கள். மூன்று படைகள் கிளம்பின. வடக்கே போன படைத் தலைவர் செர்னியகோஸ்கி. தெற்கே போன படைத் தலைவர் ரொக்கோசோவ்ஸ்கி. மத்திய ஸ்தானத்திலிருந்தவர் ஷகரோவ். இந்த மூன்று படைகளும் ஒரே திட்டப்படி போராடி ஜூலை மாதம் 3-ம் தேதி மின்ஸ்கைக் கைப்பற்றின. ரஷ்யப் படைகள் முன்னேறிப் பரவி விடாதபடி வட பகுதியிலும் தென் பகுதியிலும் உள்ள படைகளோடு கடும் போராடிக் கொண்டிருக்கிறார்கள் ஜெர்மானியர்கள். வடக்கே செர்னியகோவ்ஸ்கியின் படைகள் மின்ஸ்க்-வில்னா பகுதியைக் கைப்பற்றிக் கொண்டிருக்கின்றன. மேலும் வடக்கே, ஜெனரல் பாரகாரமியான் பொலொட்ஸ்கைக் கைப்பற்றிக் கொண்டார். வில்னாவையும் ட்வின்ஸ்கையும் இணைக்கும் ரயில்வேயையும் கைப்பற்றிக் கொண்டார். இதற்கு ஒரு விசேஷப் பெயருண்டு. அதாவது, 'முதலாவது பால்டிக்' படைக் கூட்டம் என்று இதற்குப் பெயர். இந்தப் படை ஸ்வின்ஸ்கை வளைந்து கொண்டிருக்கிறது. இதுவும் வில்னாவைப் போன்ற தோர் முக்கியமான ரயில்வே ஜங்ஷன். இதன் வழியாகத் தான் லெனின்கிராட்-வார்சா ரயில்வே போகிறது. எஸ்டோனியா, லட்வியா, லிதுவேனியா ஆகிய நாடுகளிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு சப்ளைகள் இந்த ரயில் மார்க்கமாகத் தான் அனுப்பப்பட வேண்டும். மின்ஸ்க்குக்குத் தெற்கேயும் தாம் தாக்கும் பகுதியை ரஷ்யர்கள் விரிவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மத்தியிலுள்ள ஷகரோப் படைகளோடும், வட பகுதியிலுள்ள செரனியகோவ்ஸ்கியின் படைகளோடும் வந்து கலந்து கொள்ளும் பொருட்டு, வட மேற்கே ரொகோசோவ்ஸ்

மார்ஷல் டிட்டோவும் அவருடைய உத்தியோகத் தலைவர் மேஜர் ஜெனரல் ஆர்சா யோவனுவிசசும்.

கியின் படைகள் வெகு விரைவாகத் தாக்கிக் கொண்டு முன்னேறுகின்றன. ரொகோசோவ்ஸ்கியின் தலைமையிலுள்ள மற்ற படைகள் ஸ்லட்ஸ்கைக் கைப்பற்றி, நீமென் பள்ளத் தாக்கு வழியாக, பரந்து கொண்டு பரோனேவிச்சிக்குப் போயின. பிறகு இதையும் கைப்பற்றின. இது, மின்ஸ்க்கைவிட முக்கியமானதோர் ரயில்வே ஜங்ஷன். எப்படியென்ருல் வார்சாவிலிருந்து மாஸ்கோவிற்குப் போகும் ரயில்வேயை நிகாவிலிருந்து தெற்கே போகும் லைன் இங்கே தான் சந்திக்கிறது. இவ்வாருக மின்ஸ்க் இடுக்கித் தாக்குதலின் பயனுக, பால்டிக் நாடுகளின் ஒரு பகுதி வளைத்துக் கொள்ளப்பட்டது. அதுபோலவே தெற்கேயும் வளைத்துக் கொண்டது. இனி பரோனேவிச்சி, பின்ஸ்க், கோவில் ஆகிய பகுதிகளிலிருந்து தாக்குவதன் பயனுக ப்ரெஸ்ட்-லிடோவஸ்க் என்னும் முக்கியமான ரயில்வே ஜங்ஷனையும் ரஷ்யர்கள் கைப்பற்றி விடுவார்கள்.

மூன்று பெரிய ரஷ்யப் படைகள் தனித் தனியே வெற்றிமேல் வெற்றி பெற்று இப்போது ஒன்று சேர்ந்து விட்டன இப்போது 170 மைல் அகலமுள்ள போர் முனையில் போராடிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்களோ பிரிபெட் சதுப்பு நிலப் பகுதியிலும் நார்மண்டியிலும் மேலும் கடுமையான தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். இவற்றைச் சமாளிக்க மேலும் அதிகப் படைகளை அங்கங்கே அனுப்ப வேண்டும்.

ஜெர்மானியர் திட்டங்கள்

பெரும் படையினரான ரஷ்யர்களின் தாக்குதல்களைச் சமாளித்துக் கொண்டு, பிரான்சில் ஒரு முடிவான பலனடைய வேண்டுமென்பது தான் ஜெர்மன் படைகளின் பெருந் தலைவரின் எண்ணமென்று தெரிகிறது. "இங்கே ஒரு முடிவு கண்ட பிறகு தான், கிழக்கே முழு பலத்தையுங் கொண்டு எதிரியோடு போராடலாமென்று லாஸ்க்ரீவியர் என்னும் ஜெர்மானியர் ஒருவர் எழுதுகிருர். பல போர் முனைகளிலும் ஒரே காலத்தில் நடைபெறும் யுத்தத்திற்கு ஜெர்மானிய உத்தியோகஸ்தர்கள் கூறும் சமாதானம் இது தான். நாள் தோறும் இது அங்கே பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு முறைகள்

போலந்தின் மேற்குப் பகுதியையும் மத்தியப் பகுதியையும் பாதுகாக்கும் பொருட்டு ஜெர்மானியர்கள் செய்யும் ஆயத்தங்களைக் குறித்து வரும் செய்திகள், இதற்கு மிகவும் பொருத்தமாயிருக்கின்றன. சென்ற மே மாதம் 25-ம் தேதி போலந்தின் இராணுவ அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் சேர்ந்து ஒரு பிரகடனம் விடுத்தார்கள். அதில் அரண்கள் அமைக்கும் வேலையில் அனைவரும் ஈடுபட வேண்டுமென்று கோரிஞர்கள். கடைசியாக வந்த தகவல்களிலிருந்து ப்ரெஸ்ட்-லிடோவ்ஸ்க்குக்குத் தெற்கிலும் வடக்கிலுமுள்ள பக் அரண் வேலை முடிவடையத் தக்க நிலைமையிலிருப்பதாகத் தெரிகிறது. இதன் தென் கோடி, லோ வளைவில் கட்டப்படுகிறது. இந்த அரண் கார்பேதியன் பகுதி வரை பரவும்.

இந்த அரணைக் கடந்து ரஷ்யப் படைகள் வந்தால் ப்ரஷ்யாவின் கீழ் பகுதியைப் பலி கொடுக்க வேண்டியது தான். அப்படி நேருமானுல் ஜெர்மன் படைகள் டான்சிக், வார்ஸா, ப்ரெஸிமிசில் முதலிய இடங்களில் புகல் பெறவேண்டியது தான். ஏனென்ருல் இந்தப் பகுதி நெடுக, பெருவாரியான வேலைகள் நடைபெறுவதாகத் தெரிகிறது. இன்னும் மேற்கே, க்ராகோவிலிருந்து டுனெஜெக் வரை அரண்கள் கட்டப்படுகின்றன.

இவற்றினின்று ஒரு உண்மை தெளிவாக விளங்குகிறது. ரஷ்யர்களுடன் நடைபெறும் போராட்டத்தில் படிப்படியாகப் பின் வாங்கி அமைந்து கொள்வதற்குத் தக்கபடி அரண்களை ஜெர்மானியர்கள் அமைத்துக் கொண்டிருக்கிருர்கள். பிரான்சில் முதலில் அவர்களுக்கு வெற்றி கிடைத்த பிறகல்லவா கிழக்கே ரஷ்யாவோடு முழுப் போர் தொடுக்கப் போகிருர்கள். இது ஒருபோதும் முடியாத காரியம்.

நார்மண்டியில் போயிறங்கிய வுடனே, ஜெனரல் மண்ட்காமரி பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு விவரங்களைக் கூறுகிருர்.



பத்தாவது கூர்க்க ரைபில்ஸ் படையைச் சேர்ந்த சுபேதார் மேஜர் லக்பா ட்ஷேரிங் லாமா பகதூருடன் இந்திய பிரதம படைத் தலைவர் கலந்து பேசுகிறார்.

காட்டுப் பயிற்சிப் படைகளுக்கு பிரதம படைத் தலைவர் விஜயம்.



பிரதம படைத் தலைவர் இராணுவ 'கான்டீனு'க்கு விஜயம்.

சனவாரிலுள்ள லாரென்ஸ் ராயல் இராணுவப் பள்ளிக்கூட மாணவிகளுடைய நோட்டு புத்தகங்களில் பிரதம படைத் தலைவர் கையெழுத்திடுகிறார்.



மூங்கிலைக் கொண்டும் மண் கட்டிகளைக் கொண்டும் பாலங்கள் அமைப்பதை பிரதம படைத் தலைவர் பார்வையிடுகிறார்.

ஒற்றையடிப் பாலத்தின் வழியாக ஒரு ஆற்றைக் கடந்து போகும் படைகளைப் பிரதம படைத் தலைவர் பார்வையிடுகிறார்.

பர்மாவில் இந்திய விமானப் படை

பர்மா போர் முனையில் இந்திய விமானப் படை மிகச் சிறந்த முறையில் போராடியது. எதிரி ஸ்தானங்களைத் தவிடு பொடியாக்குவதிலும் நம் படைகளுக்கு சப்ளைகள் ஏற்றிக் கொண்டு போகவும் அது பெரிதும் பயன்பட்டது.

இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானி ராவ், லெப்டினெண்ட் பி. ஞான ஒளிவு, லெப்டினெண்ட் ராஜாராம் ஆகியோர், விமான நிலைய நாய் பான்ஸோவுடன் காணப்படுகிருர்கள்.



இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானி சுரேந்திரா (பெங்களூர்) அந்த விமானத்தில் ஏற்றப்பட்டிருக்கும் வெடி குண்டுகளைத் தணிக்கை செய்கிருர். இதில் பி. எம். நாயர் (மலையாளம்), சி. வி. ஜே. ராவ் (பெங்களூர்), பி. நரசிம்மலு (சென்னை), கெக்ரி (நாகபுரி), ஆகியோர் காணப்படுகின்றனர்.



போர் முனைக்குப் போய்த் திரும்பி வந்த விமானத்தைச் சுத்தப்படுத்தி மேலும் தளவாடங்கள் ஏற்றப்படுகின்றன.



மாமரத்து நிழலில் இயந்திர நிபுணர்கள் ரேடியோ இயந்திரங்களைப் பழுது பார்க்கின்றனர். இதில், மலையாளம் ஹம்ஸா, சென்னை சார்ஜெண்ட் நரசிங்கம், ராவில்பிண்டி காப்டன் மணி சிங், ஜலந்தர் செட். ஏ. அவீஸ் (சிக்னல் உத்தியோகஸ்தர்), ஆந்திரா ரெங்கைய்யா, கோயமுத்தூர் சார்ஜெண்ட் கோபாலன், கராச்சி சார்ஜெண்ட் ஜோசப், பம்பாய் ரொசாரியோ, சென்னை ஆசீர்வாதம், பெரோஸ்பூர் சத்வந்த் சிங், ஆகியோர் காணப்படுகின்றனர்.

போர் முனைக்குப் பறந்து செல்ல பேராவலுடன் விமானக் கூட்டத்திற்கு வந்துள்ள விமானிகள்.

பொது மக்கள் யுத்தம் - சேமிப்பு

(டாக்டர் டி. எஸ். ராஜலக்ஷிமி)

டாக்டர் டி. எஸ். ராஜலக்ஷிமி

இப்பொழுது நடக்கும் யுத்தம் பல விதங்களிலும் மிகவும் நூதனமா யிருக்கிறது. இதற்கு முன்பு கேட்டிராத பல ஆயுதங்களும், கருவிகளும் மட்டு மின்றி இன்னும் ஒரு விதத்திலும் நூதனமா யிருக்கிறது. இந்த யுத்தத்தினால் பாதிக்கப்படாத மக்கள் ஒருவருமே உலகத்தில் இல்லை யென்று திட்டமாய்க் கூறிவிடலாம். போர்முனையில் சண்டை செய்யும் நம் வீரர்களுக்கு ஒருவிதத்தில் கஷ்டமென்றால், போர் முனைக்கு வெகு தூரத்திலுள்ள தொழிலாளிக்கும் குடியானவனுக்கும் வேறொரு விதத்தில் கஷ்டம். சமாதான காலத்திலிருந்த வாழ்க்கை முற்றிலும் மாறிவிட்டது. ஒவ்வொருவரும் யுத்த காலத்திற்குத் தகுந்தபடி தங்கள் வாழ்க்கையையும் திட்டங்களையும் சீர்திருத்தி அமைக்க வேண்டியிருக்கிறது.

சேமிப்பு இன்றியமையாதது

யுத்தத்தினால் பலகெடுதல்கள் ஏற்பட்டாலும், இரண்டொரு நன்மைகளும் ஏற்பட்டிருக்கின்றன. யுத்தங் காரணமாக நாட்டில் வேலை யில்லாத் திண்டாட்டம் ஒரு வழியில் குறைந்திருக்கிறது. உடலுழைத்து வேலை செய்யக் கூடியவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கிறது. அதிலும் முன்பு கிடைத்த கூலியை விட, அதிகமே கிடைக்கிறது. இந்த விதமாக கூலி அதிகமானதற்கு முக்கிய காரணம் நாட்டில் செலாவணிப் பெருக்கமே. அதிகக் கூலி சம்பாதிக்கும் தொழிலாளியோ குடியானவனோ, தன் குடும்பத்தை நடத்துவதற்கு, சமாதான காலத்தை விட அதிகம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இருந்த போதிலும், நம் தமிழ் நாட்டுப் பெரியார்கள் ஆதிகாலத்தி லிருந்து நமக்குப் போதித்து வந்த உண்மையை நாம் கைப் பிடிக்கவேண்டும். ஒரு பாகத்தை, சேமித்து வைக்க வேண்டும். சேமித்து வைத்தல் என்பது சாதாரண காலங்களிலேயே ஒரு அவசியமான வழக்க மென்றால் சண்டை நடக்கும் இக்காலத்தில் செலாவணி அதிகரிக்கும், இக்காலத்தில்—மிகவும் இன்றியமையாத ஒரு வழக்கமாய் விட வேண்டும்.

அரசாங்கத்திற்குப் பொது மக்கள் கடமை

யுத்தம் நடக்கும் இக்காலத்தில் நாம் ஒவ்வொருவரும் நம்மாலான உதவியை செய்ய முன் வரவேண்டும். யுத்தத்தை நடத்த சர்க்காருக்கு ஏராளமாய்ப் பொருள் செலவாகின்றது. இச் செலவின் ஒரு பகுதியைப் பொது மக்கள் எல்லோரும் தங்களது சக்திக்கேற்றவாறு தாங்கிக் கொள்ள வேண்டும். நம் நாட்டில் இதற்குப் பல வழிகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். தங்கள் வரும்படியில் ஒரு பகுதியை மிச்சப்படுத்தி சர்க்காருக்குக் கடனாகக் கொடுத்து வைத்தால், இது இரு தரத்தாருக்கும் பிரயோஜனமுள்ள ஒரு நல்ல வழியாகும். யுத்தத்திற்குப் பின், சர்க்கார் அக் கடனை வட்டியுடன் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். பொது மக்களுக்கு யுத்தத்திற்குப் பின் இப்பொழுது இருப்பதை விட, அதிகக் கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தக் காலத்தில் முன்பு தாங்கள் சேமித்து வைத்த பணம், அதிகமா யிருந்தாலுஞ் சரி, குறைவாயிருந்தாலும் சரி மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

சேமிப்பை பாங்கிகளில் போடுக !

நம் நாட்டிலுள்ளவர்களில் சிலர் தங்களிட மிருக்கும் பணத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து வைப்பதற்காக பணத்தைத் தங்களிடமே வைத்துக் கொள்ளுவது உண்டு. இது எந்தக் காலத்திலுமே சரியான வழியல்ல. முன்னேற்ற மடைந்த நாடுகளில் மக்கள் பணத்தைத் தங்களிடம் வைத்துக் கொள்ளாமல் பாங்க் முதலியவற்றில் போட்டு வைப்பார்கள். இதனால் பணம் வீணே துருவேறாமல் நாட்டின் முன்னேற்றத்திற்காக தொழில் துறையில் பயன் படும். நம் நாட்டு மக்களும் தங்களிடமுள்ள பணத்தை வீணே சேர்த்து வைத்து துருவேற விடாமல் செய்வது அவ்சியம்.

தேசிய சேமிப்புப் பத்திரங்கள்

நாணயச் செலாவணி அதிகமாக இருக்கும் இந்த நாளில் எல்லோரிடமும் பணமிருக்கின்றது. இதிலிருந்து தாங்கள் சேமித்து வைக்கும் பணத்தை யுத்தத்திற்கு உதவி செய்வதற்காக தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வாங்குவதில் உபயோகித்தால், தங்களது கடமையைச் செய்தவர்களாவார்கள். யுத்த முனைக்குச் சென்று போரில் நேரில் ஈடுபட முடியாதவர்கள் அவசியம் இந்த வழியிலாவது நாட்டிற்கும், சமூகத்திற்கும் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்.

ஏழைகளும் சேமிக்கலாம்

ஏழை எளியவர்கள் எப்படி சேமித்து சர்க்காருக்கு உதவி, பிற்காலத்தில் தாங்களும் பயனடையலாம் என்பதை இப்பொழுது சொல்லுகிறேன். எளியவர்களும் இராணுவ குடும்பத்தினர்களும், தொழிலாளர்களும் எப்படி சிறிய சேமிப்புத் திட்டத்தைக் கையாள முடியும் ? இதன் மூலம் எந்த வகையில் தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வாங்க முடியும் ?

சாதாரணமாக ராணுவ குடும்பத்தினர்களுக்கும் தொழிலாளர்களுக்கும், குடியானவர்களுக்கும் இது ஒரு உன்னதமான திட்டம். சுலபமாகவும் கஷ்டமின்றியும் எளிதில் பணம் சேமித்து வைப்பதற்கு அனுகூலமானது.

பெண்களும் சேமிக்கலாம்

யுத்த முனையிலிருந்து வீரர்கள் மாதா மாதம் அனுப்பிக் கொண்டிருக்கும் பணத்திலிருந்தும் மற்றவர்கள் சம்பாதிக்கும் பணத்திலிருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக பணம் சேமித்து தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வாங்குவீர்களானால், உங்கள் குழந்தைகள் கல்யாணத்திற்கோ, அல்லது கூட்டுறவு வியாபாரத்திற்கோ அல்லது படிப்பிற்கோ உதவும். ஆண்கள் மாத்திர மல்ல, பெண்களும் எவ்விதத்திலும் பணம் சேமிக்கலாம் ; சேமிக்கவும் முடியும். இந்த யுத்த காலத்தில் அநேகர் பணம் சம்பாதிப்பதற்கு வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அதுவுமன்றி சம்பளமும் அதிகமாக கொடுக்கப்படுகிறது. விலைவாசிகள் அதிகப்பட்டிருப்பினும், நாம் ஒரே அடியில் பணம் சேர்க்க முடியா விடினும், இந்த சிறிய சேமிப்புத் திட்டமானது கவர்ன்மென்டால் ஏழைகளுக்குச் சுலபமாக சேமிக்க ஏற்படுத்தியிருப்பதால், நாம் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடாமல் சிறிது சிறிதாகச் சேமித்து நேஷனல் சேமிப்புப் பத்திரத்தை வாங்கி, நம் பிற்கால நன்மைகளைத் தேடவேண்டும்.

முதலில் வீட்டில் சாமான் செட்டுகளில் சிக்கனம் காட்டாவிட்டால், மற்ற எந்த வகையிலும், அதிகமாக மிகுதிப்படுத்தவோ அல்லது சேமிக்கவோ முடியாது. அது எப்படி எனில், ஒவ்வொரு விஷயங்களிலும் அதாவது சாப்பாடு முதல் துணி, நகை முதலிய ஒவ்வொரு செலவிலும் பெண்கள் தான் முக்கியமாக சிக்கன முறையைக் கையாள முடியும். அவர்கள் தான் சேமிக்க முக்கியமாக ஆண்களுடன் உதவ முடியும்.

இப்படி உங்களுக்கு எல்லாவித வசதிகளும் சௌகரியங்களும் ஏற்பட்ட

இங்கிலாந்திலுள்ள ஒக்லான்ட் விவசாயப் பண்ணைக் கலாசாலையில் உள்ள ஒரு விவசாய இயந்திரத்தை யுத்த மந்திராலோசனை சபையின் இந்திய அங்கத்தினரான சர் பெரோஸ்கான் நூன் பார்வை யிடுகிருர்.

காலத்தில் பணம் சேமிக்கா விட்டால், எப்பொழுது பணம் சேமிக்கப் போகிறீர்கள் ?

சிறிய சேமிப்புத் திட்டம்

இந்தச் சிறிய சேமிப்புத் திட்டம் இந்திய சர்க்காரால் கியாரண்டி செய்யப்பட்ட தகுந்த வட்டி தரக் கூடிய முதல்தரமான ஒரு கைமுதல் திட்டம். இதற்கு வருமான வரி கிடையாது. 10 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரை தேசீய சேமிப்புப் பத்திரங்கள் வாங்கிக் கொள்ளலாம். இதை மூன்று வருடத்திற்கு அப்பால் எப்பொழுது வேண்டுமானாலும் தகுந்த வட்டியுடன் ரொக்கம் செய்து கொள்ளலாம். 12 வருஷம் பூர்த்தி அடைந்த பிறகு வாங்கிக் கொண்டால் 4-1/6 சதம் வட்டி அளிக்கப் படுகிறது. அதாவது 10 ரூபாய்க் கொடுத்து ஒரு தேசீய சேமிப்புப் பத்திரம் வாங்கினால் 12 வருஷத்திற்குப் பிறகு 15 ரூபாயாக திருப்பி வாங்கிக் கொள்ளலாம்.

இந்தச் சேமிப்புத் திட்டமானது யுத்த காலத்திற்கு மாத்திர மல்லாமல் தேசீய முன்னேற்றத்திற்காக யுத்தத்திற்குப் பிறகும், பல வருஷங்களுக்கு ஏற்பட்டது. இந்தச் சேமிப்புப் பத்திரங்கள் ஒவ்வொரு ஊரிலும் தபாலாபீஸ்களிலும், கவர்ன்மெண்டாரால் அனுமதிக்கப்பட்ட ஏஜெண்டுகளிடமும் வாங்கக் கூடியது.

சேமிப்பு ஸ்டாம்புகள்

ஒரே அடியில் சிலர் பத்து ரூபாய் சேமிக்க முடியாதவர்கள் தபாலாபீசிலிருந்து ஒரு சேமிப்பு ஸ்டாம்பு ஒட்டும் கார்ட் வாங்கி அதில் 4 அணு ஸ்டாம்புகள், 8 அணு ஸ்டாம்புகளாக பத்து ரூபாய் வரை சேமித்துப் பிறகு அதை கொடுத்து ஒரு தேசீய சேமிப்புப் பத்திரம் வாங்கலாம். "சிறு துளி பெரு வெள்ளம்" என்பது போல் ஒவ்வொரு குடும்பங்களிலும், ஆண்களும், பெண்களும் இந்தத் திட்டத்தை அனுசரித்தால் சிறிய தொகையானது நாளடைவில் பெரிய தொகையாக அடைந்து விடுகிறது. நாம் ஒரே கல்லில் இன்று பழம் அடைவது போல் இந்த பொது மக்கள் யுத்தத்தில் நம் பணத்தைக் கவர்ன்மெண்டில் கொடுத்துதவியதாக இருப்பது மல்லாமல் நாமும் இதர வகைகளில் அதாவது பாங்கி முதலியவற்றை விட வட்டி அதிகமாய் அடைவது மல்லாமல் பத்திரமாக பணம் திருப்பி அடைய ஒரு நல்ல சந்தர்ப்பம்.

—சென்னை அகில இந்திய வானொலி நிலயத்தி லிருந்து ஒலிப்பரப்பப் பட்ட பிரசங்கம்.

யுத்தத்திற்கு 60,000 இந்திய மிருகங்கள்

போர்முனையில் பயன்படும்பொருட்டு இராணுவ "ரிமௌண்ட்" இலாகா 60,000 மிருகங்களை இந்தியாவில் வாங்கி யிருக்கிறது. தென்னாப்பிரிக்கா, அர்ஜென்டைன், வட அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டவை கோவேறு கழுதைகள் உள்பட 30,000.

யுத்த நாய்கள் தவிர, மற்ற எல்லா வகை மிருகங்களையும் வாங்கிப் பழக்குகிறவர்கள் இராணுவ "ரிமௌண்ட்" இலாக்காக்காரர்கள் தான். இராணுவப் போக்கு வரவுக்கான மிருகங்களில் ஒரு பகுதியை மட்டும் ஆர்.ஐ.எ.ஐ.சி. பகுதியார் பழக்குகின்றனர்.

இந்தப் பெரிய கொள்முதல் ஸ்தாபனத்தார், குதிரைகள், பெண் குதிரைகள், கோவேறு கழுதைகள், எருமைகள், ஒட்டகங்கள் ஆகியவற்றைக் கையாளுகிருர்கள்.

சென்ற 40 வருஷங்களாகக் குதிரை இன விருத்தியில் இராணுவ "ரிமௌண்ட்" இலாக்கா அக்கரை கொள்ளா திருந்தால், இந்திய வின் தேவைகளுக்கேற்ற அளவு குதிரைகள் கிடைப்பது அரிதாகி யிருக்கும். 14 வது படையில் இப்போதுள்ள மிருகங்களில் 5-ல் 3 பங்கு இந்தியாவில் பிறந்தவை.

குதிரை வளர்ப்பவர்கள் தம் பெண் குதிரைகளோடு, அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆண் குதிரைகளையாவது, கோவேறு கழுதைகளையாவது பிணைத்து, குதிரை இனத்தைப் பெருக்குகிருர்கள். குதிரை வளர்க்க அங்கீகாரம் பெற்றவர்கள் 10,000 பேர்கள் இருக்கிருர்கள். இராணுவத் தேவையினால் விவசாயப் பொருளாதாரம் எவ்வளவு தூரம் லாபமடைகிறது என்பதற்கு இது ஒரு சான்று.

குதிரைகளையும் மட்டக் குதிரைகளையும் விட, நாட்டின் பொருளாதாரத்திற்கு அதிக உதவியா யிருக்கும் எருமைகளுங் கூட யுத்த வேலைகளுக்குப் பயன் படுத்தப் படுகின்றன. சப்ளை வண்டிகளை இழுத்துச் செல்லுகின்றன. இதனால் பெட்ரோல் செலவு குறைகிறது.

காலஞ் சென்ற ஜெனரல் விங்கேட்தான் எருமைகளைக் காட்டுப் போராட்டத்திற்குப் பயன் படுத்தினர். எருமையின் குளம்புகள் பிளவுபட்டிருப்பதனால் தரையிலும் தண்ணீரிலும் போகும். சேற்றிலும் எளிதில் போகும். மேலும் பர்மாவில் மற்ற மிருகங்களைப் பற்றும் ஒரு வகை நோய் எருமையைப் பற்றுவதில்லை.

சகரன்பூர் "ரிமௌண்ட்" டிப்போவில் மிருகங்களுக்குப் போர்ப் பயிற்சியளிக்கப்படுகிறது. அவை, நீந்தவும், "ட்ரக்கு"களுக்குள் போகவும், அங்கிருந்து வெளியே குதிக்கவும், விமானங்களில் ஏறிச் செல்லவும், யுத்தச் சத்தத்தைக் கேட்டுப் பழகிக் கொள்ளவும், ஒற்றையடிப் பாலங்களைத் தாண்டவும் வேண்டும். இந்தக் காடுகளில் இப்படிப் பட்ட பாலங்கள் பல உண்டு.

தென்கிழக் காசியப் படைக்கு இந்தியக் குதிரைகள் தேவைப்படு முன்பாக, பிரான்சு, மத்தியக் கிழக்கு, கிரீஸ், கிழக் காப்பிரிக்கா, ஈராக், ஈரான், ஹாங்காங் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

சீனப் படைகளுக்கு 4,200 மிருகங்களைப் பொறுக்கி யெடுக்க 30,000 மிருகங்கள் சோதிக்கப் பட்டன. இதினின்று "ரிமௌண்ட்" இலாக்கா மிருகங்களைப் பொறுக்கி எடுப்பதில் எவ்வளவு அக்கரை கொள்ளுகிருர்களென்று தெரிகிறது.

இந்த மிருகங்கள் போதுமான அளவிற்கு சப்ளை செய்யப்பட வில்லையானால், கிழக்குப் போர் முனையில் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடும். இராணுவ இலாக்காவின் முன் யோசனை பெரிதும் பாராட்டத் தக்கதே.

நான் ஒரு ஜெர்மானியனுக இருந்தால்...?

'நான் ஒரு ஜெர்மானியனுக இருந்தால், இந்தச் சமயத்திலே நடு நடுங்கத் தான் செய்வேன்!' என்று, நான்கு நாட்களுக்கு முன் சென்னை கவர்னர் துரை, சென்னையில் நடந்த பொதுக் கூட்ட மொன்றில் கூறினர். அன்று தான் ஸர் ஆர். எஸ். சர்மா, யுத்த காலத்திலே, சீமையிலும், அமெரிக்காவிலும் தாம் பெற்ற அநுபவங்களையும், கண்ட அதிசயங்களையும், இந்தியா இந்த யுத்தத்திற்காகச் செய்யும் அரிய சேவைகளைப் பற்றி அந் நாட்டினருக்கு தாம் சொன்னவற்றையும், சிங்கம் போல் கர்ஜனை செய்து கூறினர்.

ஏன் கூறினர் இப்படி ?

கவர்னர் துரை, ஏன் இப்படி, 'நான் ஒரு ஜெர்மானியனுக இருந்தால், இந்தச் சமயத்திலே நடு நடுங்குவேன்' என்று கூறினர் என்பதை, அன்றையக் கூட்டத்தில் பிரசன்னமாக இருந்த அத்தனைப் பேர்களும் சரி, அந்தப் பிரசங்கத்தைப் பத்திரிகைகளில் வாசிப்பவர்களும் சரி நினைத்துப் பார்க்கத் தான் செய்வார்கள். கவர்னர் துரை இம்மாதிரி கூறியதற்கு வேண்டிய காரணங்கள் இருக்கத் தானிருக்கின்றன.

நடப்ப தென்ன ?

இன்றைய ஜெர்மனியிலும், ஜெர்மனியைச் சுற்றிலும் என்ன நடக்கிற தென்று பார்க்கலாம். அதோ ஜெர்மனியின் கிழக்கெல்லையில் பாருங்கள். ஆமாம்! முன்பெல்லாம் உரிக்காத தேங்காய் மாதிரி இருந்தது ஜெர்மனி. அதைச் சுற்றிலும், ஹிட்லரால் பிடிக்கப் பெற்ற நாடுகள் நிறைய இருந்தன. அசல் ஜெர்மனிக்கு அதனுல் எத்தகைய ஆபத்தும் வராது; நடக்கிற யுத்த மெல்லாம் அந்நியரது பிரதேசங்களிலேயே நடக்கும்; ஜெர்மனியிலே வாழும் மக்களுக்கு யுத்தத்தின் கோரம் தெரியவராது என்று ஹிட்லரும், அவரது சகாக்களும் எண்ணியிருந்தார்கள். ஆனல் பிரிட்டிஷ், அமெரிக்க விமானப் படைகளில் ஏற்பட்ட அபிவிருத்தி காரணமாக, ஜெர்மானியர் சொந்தப் பிரதேசங்களும், அவர்களால் ஆக்கிரமிக்கப் பெற்ற பிரதேசங்களும் நேச தேச விமானிகளின் திருஷ்டிகளில் விழாது தவற முடியவில்லை. தனக்கு நிகரில்லை என்றிருந்த ஜெர்மன் விமானப் படை நாளடைவில் பலங் குன்றப் பெற்று, அந்த நிகரிலாப் பட்டத்தை நேச தேச விமானப் படையிடம் பறி கொடுத்து விட்டது.

உரிக்காத தேங்காய்

எங்கு போனலும் உதை என்று ஏற்படவே, ஜெர்மனிக்கு எல்லா வகைகளிலுமே நஷ்டம் பலமாகி விட்டது. ஜெர்மனிக்குப் பாது காப்புப் போலிருந்த, அதாவது உரிக்காத தேங்காயைப் பாதுகாக்கும் மட்டை, நார் போல விருந்த அந்நியப் பிரதேசங்களை, நேசப் படைகளும், ருஷ்ய படைகளும் மீட்கத் தொடங்கின. ஆகவே, ஜெர்மனிக்கு ஏற்படக் கூடிய ஆபத்து நாளுக்கு நாள் அதிகமாகத் தொடங்கிற்று.

நினையாது செய்த காரியம்

ருஷ்யர்கள் ஆரம்பத்திலே ஜெர்மானியரிடம் நல்ல உதை வாங்கிக் கொண்டார்கள் என்பது வாஸ்தவம். அப்பொழுது ஜெர்மனியின் ராணுவ பலம் உச்ச நிலையிலிருந்தது. அதோடு, வெற்றி மயக்கமும் அதற்கு நிறைய இருந்தது. இப்படி கண் மூக்குத் தெரியாது முன்னேறுகிறோமே. எதிரியின் சக்தி என்ன, நமது படைகளுக்கு வேண்டிய சௌகரியங்களை இவ்வளவு தூரம் தொடர்ந்து அனுபவிக் கொண்டிருக்க முடியுமா என்பதை யெல்லாம் ஜெர்மன் படைத் தலைவர்களோ, ஹிட்லரோ நினைத்துப் பார்க்கவே இல்லை. எந் நாளும் தங்களைத் தட்டிக் கேட்க ஆவியாது என்ற தவருன எண்ணம் அவர்கள் மூளைகளில் நிறைந்து, அவர்களது திருஷ்டிகளை மறைத்து விட்டது.

ருஷ்யர்கள் யார் ?

ருஷ்யர்கள் மகா நிதானக்காரர்கள்; அவர்களது தேச பக்தி இணையற்றது; அவர்கள் ஒன்று கூடி எழுந்து விட்டால், அவர்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது; நினைத்தால் அவர்கள் எதையும் சிருஷ்டித்துக் கொண்டு விடுவார்கள்; ஒரு குழந்தை முதல் தனது தாய் நாட்டைக் காப்பதற்காகப் போர்க் கோலம் பூண, அங்கு, சித்தமாக இருக்கிறது; ருஷ்ய மாதர்கள் மகா திடசாலிகள்; அவர்கள் விமானப் படைகள் முதல் சகல துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள்; தங்கள் ஆடவர்களோடு சரி சமமாக நின்று, தங்கள் நாட்டைக் கொள்ளை கொள்ள வந்த அயோக்கியர்களை அடித்து விரட்ட வேண்டு மெனும் ஆவேசம் கொண்டு போராடக் கூடியவர்கள் என்பதெல்லாம் நாளாக நாளாக, உலகோருக்குத் தெரியலாயிற்று. உலகோரை விட, செஞ்சேனையிடம் பூசை வாங்கும் ஜெர்மானியருக்கு, இந்த விவரங்கள் எல்லாம் ரொம்ப நன்ருகத் தெரியத் தொடங்கிவிட்டது.

தீர்மானமும் செயலும்

பார்த்தார்கள் ருஷ்யர்கள். ஜெர்மனியின் ராணுவ பலத்தை விட, நமது ராணுவ பலம் மிஞ்ச வேண்டும்; அதோடு, ஜெர்மானியரது தந்திரமான திடீர்த் தாக்குதலையும், வேகமாக முன்னேறும் முறையையும் வெற்றிகரமாகக் கையாள வேண்டும் என்றும் அவர்கள் தீர்மானித்தார்கள்.

அதன் பலனுக, இன்று ருஷ்ய ராணுவத்தில், ஜெர்மன் ராணுவத்திலே ருஷ்யரை எதிர்த்து நிற்கும் படைகளைப் போல் மூன்றத்தனை பேர்கள் இருப்பதாக, ஒருவர் கணக்குப் போட்டிருக்கிருர். கவசப் படைகள், பீரங்கிகள், விமானங்கள் ஆகியவற்றில் எல்லாம் ருஷ்யர்களது கை, ஒரு பிடி உயர்ந்தே இருக்கிறது. இப்பொழுது, ருஷ்யர்களிடை அசல் காலாட் படைகள் என்பதே கிடையாது. அவர்கள் எல்லாம் மோட்டார் சவாரிப் படைகளாகி விட்டனர். அதனுல் தான் ருஷ்யர்கள் சமீப காலத்தில் வாயு வேகத்தில் முன்னேற முடிந்திருக்கிறது.

வெள்ளை ருஷ்யாவிலே !

வெள்ளை ருஷ்யாவிலே, அவர்கள் முன்னேறும் வேகத்தைப் பார்த்து உலகமே பிரமிக்கிறது. இதே வேகத்தில் அவர்கள் தொடர்ந்து முன்னேற முடிந்தால், பெர்லின் நகரை ருஷ்யர்கள் தான் முதலில் போயடைவார்கள். ஆனல், வழியிலே நிறைய எதிர்ப்பு இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

வெள்ளை ருஷ்யாவில், ருஷ்யர் முன்னேற, ஜெர்மனியின் எல்லையை அவர்கள் அணுகிக் கொண்டே யிருக்கிருர்கள். ஜெர்மனியின் கிழக்குப் பிரதேசத்திற்கு கிழக்கு பிரஷ்யா என்று பெயர். அந்தப் பிரதேசத்திற்கு ஆபத்து நெருங்கி வருகிறது என்பதை ஜெர்மன் மக்கள் உணர்ந்திருக்கிருர்கள். போன வாரத்தில் பல நாட்கள், கிழக்கு பிரஷ்யாவில், உள்ள ஜெர்மானியரது செவிகளில், போர்க் களத்தில் சுடும் பீரங்கிகளின் சப்தம் விழுந்து கொண்டிருந்தது. அந்த சப்தம் அவர்களது வயிறுகளில், புளியைக் கரைத்து விட்டது போலிருந்திருக்கும். இந்த யுத்தம் தொடங்கியது முதல், இது வரை ஜெர்மானியப் பொது மக்கள் யுத்த பீரங்கிகளின் சப்தத்தைக் கேட்டதே இல்லை. ஆனல், விமானங்களிலிருந்து விழும் வெடி குண்டுகளின் ஓசைகளும், விமானங்கள் ஒன்றை ஒன்று நோக்கிச் சுடும் சப்தமும், விமான எதிர்ப்பு பீரங்கிகளின் ஓசையும் அவர்களுக்குப் பழக்கமாகி யிருக்கும். ஆனல், போர்க்களத்திலிருந்து எழும் ஓசை அவர்களுக்கு நூதனமானதாகவே இருக்கும்.

நடுக்கம் ஏற்படாமலிருக்குமா ?

யுத்தம் தங்களுக்கு இவ்வளவு அருகிலே வந்து விட்டதென்பதை உணர்ந்தும், அவர்களது உள்ளங்களிலே நடுக்கம் ஏற்பட்டிராது என்று எண்ணுகிறீர்களா?

பல வருஷங்களாக, ஜெர்மானியர் கிழக்கு ஜெர்மனியில் உள்ள கோனீஸ்பர்க் என்ற நகரில் ஏராளமாகக் குடியேறியிருந்தனர். அது ஒரு பிரமாண்டமான தொழிற்சாலை நகரமா யிருந்தது. சென்ற இரண்டு வருஷ காலத்திலே பெரும் பகுதியை ஹிட்லர் இந் நகரிலேயே கழித்து வந்திருக்கிருர் என்று சொல்லுகிருர்கள்.

ஹிட்லர் உபதேசம்

ஆனல், இப்பொழுது, அவர் அங்கில்லையாம். அந் நகரைக் காலி செய்யவும்,

அங்குள்ள தொழிற் சாலைகளையும், ஆயுத, யுத்த தளவாட 'ஸ்டாக்குகளையும் அப்புறப் படுத்தவும் ஹிட்லர் உத்திரவு போட்டு விட்டாராம். அதோடு, ஒரு வீட்டைக் கூட அப்படியே முழுசாக விட்டு விட்டுப் போகாதே! கால் நடைகளை யெல்லாம் ஜெர்மனிக்குக் கொண்டுபோய் விடு. ஆபத்திற்குள்ளான பிரதேசங்களிலே அறுவடையை சீக்கிரமே முடித்து அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு கிளம்புங்கள். அங்கங்கே உள்ள ஆட்கள், எத்தேசத்தவராயினும் சரி, அவர்களைத் தொழிலாளர் பட்டாளமாகச் சேர்த்து, ஜெர்மன் தொழிற் சாலைகளில் வேலை செய்ய, ஜெர்மனிக்கு அனுப்புங்கள்' என்று உத்திரவுகள் பிறந்திருக்கின்றனவாம்.

'இனி ஜெர்மன் மண்ணிலேயே தற்காப்புப் போரை ஜெர்மானியர் எதிர்பார்க்கலாம்' என்று ராணுவத் தலைவர்களில் பலர், சந்தர்ப்பம் ஏற்பட்டபோதெல்லாம், ஜெர்மன் மக்களுக்குச் சொல்லி வருகிறார்கள்.

புயல்கள் சூழுகின்றன !

ஜெர்மனியை பல திசைகளிலிருந்தும், பல புயல்கள் சூழ்ந்து வருகின்றன. ஆனால், அதற்குமுன், ஜெர்மானியர், ஐரோப்பாவில் தாங்கள் இருக்குமிடங்களில் எல்லாம் ரத்தம் ஆறாக ஓடச் செய்தே தீர்க்க வேண்டும்' என்று சிலர் சொல்லி வருகிறார்கள்.

'ருஷ்யாவில் பெரும் பகுதி கிடைத்து விட்டது. மாஸ்கோவும் பிடிபட்டு விடும். ருஷ்யரது ஆட்சிக்கு முற்றுப் புள்ளி குத்தப் போகிறோம்' என்று ஜெர்மானியர் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்த காலமெல்லாம் மலையேறி விட்டது. தற்சமயம், ஜெர்மானியரிடம், சோவியத் பிரதேசத்தின் விளிம்பு மட்டும் தானிருக்கிறது. இன்னும் சில நாட்களில், அதுகூட, அவர்களது கைகளை விட்டுப் போய்விடும் போலிருக்கிறது.

பால்டிக் பிரதேசங்களையும், கிழக்கு ஜெர்மனியையும் காட்டும் பிரதேசப் படங்கள் செஞ்சேனைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றனவாம். அதன் அர்த்தம் என்ன? கூடிய சீக்கிரமே அப்படைகள் அப்பிரதேசங்களில் புகுந்து போராட வேண்டியிருக்கும்; ஆகவே, அப்பிரதேசங்களைப் பற்றி ஒவ்வொருவரும் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் அர்த்தம்.

ஆபத்தான நிலைமை

இதுவரை வெள்ளை ருஷ்யாவிலே மட்டும், இரண்டரை லக்ஷம் ஜெர்மானியர் மண்ணைக் கௌவி விட்டனர். பல ஜெர்மன் ஜெனரல்கள் தங்கள் படைகளோடு, ருஷ்யரிடம் சரண்புகுந்து வருகிறார்கள். பெரிய தளபதிகளில் சுமார் ஐம்பது பேர்கள் யமனுலகு சென்று விட்டனர். இன்னும் ருஷ்யர்கள் எங்கெங்கிருந்தெல்லாம் முன்னேறுவார்களோ தெரியாது. ருமேனியா திசையில் அவர்கள் பேசாதிருப்பது, பெரிய தாக்குதலுக்கு ஏற்பாடு செய்வதற்கான அறிகுறியாக இருக்கலாம். ஆகவே, ஜெர்மானியர் இனி, ருஷ்யப் பிரதேசங்களை மறந்து, ஜெர்மனியைக் காக்கும் நினைப்பைக் கொள்ள வேண்டிய நிலைமையை அடைந்து விட்டார்கள்.

தெற்கிலே, இத்தாலியிலே, ஜெர்மன் படைகளின் நிலைமை ஒன்றும் பார்த்துப் பொறுமைப்படும்படியாக இல்லை. நேசப் படைகள் விடாது முன்னேறிக்கொண்டு தானிருக்கின்றன. அதன் முன்னேற்ற வேகத்தை நாஸிப்படைகள் குறைத்துக் கொண்டிருக்கின்றனவே ஒழிய, அவற்றால் அந்த வேகத்தைத் தடுத்து நிறுத்தவே முடியவில்லை.

பாவம் ! முசோலினி !

இப்பொழுது, ஜெர்மானியர் செய்யும் காரியங்களைக் கவனித்தால், வட இத்தாலியை அவர்கள் காலிசெய்து விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள் என்றே தோன்றுகிறது. வட இதாலியில், சில தொழிற் சாலைகள் இருக்கின்றன. அவற்றிற்கு நாஸிகள், ஜெர்மனியிலிருந்து நிலக்கரி அனுப்பி வருகிறார்கள். இப்பொழுது அந்த 'சப்ளை'யை அவர்கள் நிறுத்தி விட்டதாகத் தெரிகிறது. ஆகவே, வட இத்தாலியில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் உதவி நீடித்திராது; அவற்றால் இனி லாபமுமில்லை என்று நாஸிகள் எண்ணிவிட்டார்கள் போலிருக்கிறது. நாஸிகள் இத்தாலி முழுவதையும் காலி செய்வார்களேயானால், அது அவர்களுக்குப் பெரிய தோல்வியேயாகும். பாவம்! முஸோலினி கண்டு கொண்டிருக்கும் ஒரு முடிவு ஏற்படும். அந்த மனுஷர் எங்கே ஐயா போய்விட்டார்? சமீபகாலத்தில் அவரது சப்தமே காணோமே! இத்தாலியைத் திரும்பப் பிடித்து அதை ஆளுவோம் என்றிருந்த அவரது எண்ணத்தில் பூராவாக மண் விழப் போகிறது. ஹிட்லர் பாடே அம்பலத்திற்கு வரும்போலிருக்கையில், சொத்தை முஸோலாவை யார் கவனிக்கப் போகிறார்கள்?

பிரான்ஸிலே !

பிரான்ஸிலே நடப்பதென்ன? நேசப் படைகள் வெற்றிமேல் வெற்றியாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றன. செர்பூர்க் பிரதேசத்தைக் கெட்டியாகக் கைகளில் வைத்துக்கொண்டு, ராஜா மாதிரி மேற்கொண்டு தளவாடங்களையும், ஆட்களையும் கொண்டுவந்து சேர்த்துக் கொண்டு, புதிதுபுதிதாக நாஸிகள் மீது தாக்குதல்களை அவர்கள் ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரொம்பப் பெரிய சூரர் என்று கூறப்பட்ட ஒரு படைத் தலைவருக்கு ஹிட்லர் சீட்டுக்கொடுத்து, ஜெர்மனிக்குத் திரும்ப அழைத்துக் கொண்டுவிட்டார். இப்பொழுது வேறொருவர் வந்திருக்கிறார். அவரும், ரோமல் துரையும் சேர்ந்து ஒன்றும் பிரமாதமாகச் சாதிக்க முடியவில்லை.

பேசுவார்களா ?

இரண்டாவது போர்முனை ஏற்படும் வரை, நாஸிகள், அட்லாண்டிக் சுவரைப் பற்றிப் பிரமாதமாகப் பீத்திக் கொண்டிருந்தார்கள். அந்தச் சுவரைத் தகர்த்துக் கொண்டு, நேசப் படைகள் பிரான்ஸிற்குள் புகுந்து போராடத் தொடங்கிய பின், அவர்கள் பேசாது வாயை மூடிக் கொண்டுவிட்டனர். இப்பொழுது பற்களைக் கடித்துக் கொண்டு, மேற்கொண்டு நேசப் படைகள் முன்னேறி, பிரான்ஸை விடுவித்து, ஜெர்மனிக்குள் யுத்தத்தைக் கொண்டுவந்து விடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டியது நாஸிகள் கடமையாகிவிட்டது. அவர்கள் எங்கே பேசப் போகிறார்கள்?

நேசதேச விமானங்கள் இன்னும் கடுமையாகவே, ஆயிரக் கணக்கில் ஜெர்மன் தொழிற்சாலைகள் மீது பறந்து கொண்டிருக்கின்றன. அவற்றால் ஏற்படும் சேதங்கள் ஒவ்வொன்றும் யுத்தத்தின் முடிவை துரிதப்படுத்தி வருகின்றன.

ஹிட்லர் கெய்ஸர் போலல்ல !

இப்படியாக, எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஜெர்மனியை அமுக்க, நேசப் படைகள் போய்க் கொண்டிருக்கின்றன. இதே நிலைமை ஏற்படு முன்பே கெய்ஸர் போன யுத்தத்தில் சமாதானத்திற்கு வந்துவிட்டார். ஜெர்மனியில் எந்தப் பாகமும் பாழாகக் கூடாது என்பது அவரது விருப்பமாக இருந்தது.

ஆனால், இப்பொழுதுள்ள ஜெர்மன் தலைவர் கெய்ஸரல்ல. ஹிட்லர் ஜெர்மனியின் ஆள் பலத்தையும், ஆயுத பலத்தையும் கடைசிவரை செலவழித்துப் பார்த்து விடுவது; அப்படிச் செலவிட்டும் எதிர்பார்த்தபலன் கிடையாவிட்டால், ஜெர்மனியையும், ஐரோப்பாவையுமே பாழாக்கி விடுவதென்று தீர்மானித்திருக்கிறார் இவர். ஆகவே, இப்படிப்பட்ட ஒருவரோடு சமாதானம் செய்துகொள்ளவும் நேச நாட்டினர் சித்தமாக இல்லை. அவரையும் ஒழித்து, அவரது போதனைகளையும் ஜெர்மானியர் பூராவாக மறக்கச் செய்து, ஜெர்மனியை நிராயுதபாணியாக்கி, திரும்பவும் ஒரு யுத்தம் ஏற்படாதபடி செய்துவிட்டு, அப்புறம்தான் ஜெர்மனியை ஜெர்மானியரிடம் ஒப்படைப்பார்கள் நேசநாட்டினர்.

நடுங்கவேண்டியது தான் !

இது இப்பொழுது ஜெர்மானியர் ஒவ்வொருவருக்கும் கட்டாயம் தெரிந்திருக்கும். அதனால் தான் ஹிட்லர் இப்பொழுதெல்லாம் ஜம்பமாக ஏதும் பேசுவதில்லை. ஜெர்மன் தாய்மார்களும், பெண்களும், பொது மக்களும் தங்களுக்கு நேரப்போகும் கோர கதியை அறிந்தபின், நடுங்காமலிருக்க முடியுமா? அது தான் சென்னை கவர்னர் பிரபு சொன்னார். 'நான் ஜெர்மானியனாக இருந்தால் நடுநடுங்குவேன்' என்று.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஜூலை 13.—பறக்கும் வெடி குண்டுத் தாக்குதலைக் குறித்து டிபுடி முதன் மந்திரி மிஸ்டர் அட்லி காமன்ஸ் சபையில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

பறக்கும் வெடி குண்டு எதிர்ப்புக் காட்சிகளை மாட்சிமை தங்கிய மன்னரும் அரசியாரும் பார்வை யிட்டனர்.

ஜூலை 14.—பறக்கும் வெடி குண்டுகளினின்று நாட்டைப் பாதுகாப்பதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் குறித்து காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிசன் ஒரு அறிக்கை விடுத்தார். யுத்த நிலைமையைக் குறித்தும் பொதுவாக ஒரு அறிக்கை விடுத்தார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

ஜூலை 12.—சர்வ தேசப் போலீஸ் படை யிருக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து மிஸ்டர் ரூஸ்வெல்ட் ஒரு அறிக்கை விடுத்தார்.

ஜூலை 13.—மாஜி அமெரிக்கத் தலைவரான தியோடர் ரூஸ்வெல்டின் மகனை பிரிகேடியர் ஜெனரல் தியோடர் ரூஸ்வெல்ட் நார்மண்டியில் காலமானர்.

ஜூலை 16.—இந்த யுத்தம் ஆரம்பமானதிலிருந்து மே மாதம் 1-ம் தேதி வரை சீனு, இந்தியா, பர்மா ஆகிய நாடுகளிலுள்ள போர் முனைகளுக்கு 1,400 கோடி டாலர் பெறுமானமுள்ள சாமான்கள் கடன் குத்தகை ஒப்பந்தப்படி அனுப்பப்பட்டிருப்பதாக அமெரிக்க அன்னிய நாட்டுப் பொருளாதார நிர்வாகி மிஸ்டர் லியோ க்ரோலி குறிப்பிட்டார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜூலை 12.—சாபு என்னுமிடத்தில் எதிரி அடியோடு தோற்கடிக்கப் பட்டுவிட்டபடியால், போராட்டம் கமாயிங்-மோகாங் ரோட்டில் முடிவுற்றது.

ஜூலை 13.—சங்ஷக், மாக்பிகுநௌ ஆகிய இடங்களிலிருந்து ஜப்பானியர்கள் பின்வாங்கினர். பியின்டாவை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 16.—சம்க்ருங் என்னுமிடத்தை சீனப் படைகள் கைப்பற்றின. குங்பியை நேசப் படைகள் கைப்பற்றின. இங்கு இரக்கிலிருந்தும் காக்கடென்னிலிருந்தும் ஜப்பானியர்கள் வெளியேறினுர்கள்.

ஜூலை 17.—காக்குமீருவை 5-வது கூர்க்க ரைபில்ஸ் படை நேற்று கைப்பற்றியது.

ரஷ்யாவும், பின்லாந்தும்.

ஜூலை 12.—ரஷ்யப் படைகள் இரண்டாவது பால்டிக் போர் முனையில் உள்ள 90 மைல்களில் 20 மைல் தூரம் முன்னேறி இட்ரிஸ்டாவையும் மேலும் 1,000 ஊர்களைக் கைப்பற்றின.

மற்ற போர் முனைகளில், க்ரகாய், வசிலியாஸ்கி, ரெடுன், வெல்வா, இன்னும் 400 ஊர்களையும் செம்படைகள் கைப்பற்றின.

ஜூலை 13.—லுதுவேனியாவின் தலைநகரான வில்னு, டிரிஸ்ஸா, தையுட் சேப்ருசனி, ஒரனி, வியவிஸ், இன்னும் 500 இடங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றின. கரேலியன் பின்லாந்து குடியரசைச் சேர்ந்த சுனுர்வி முதலிய 20 இடங்களையும் கைப்பற்றின.

ஜூலை 14.—பின்ஸ்க், வால்கோபிஸ்க் ஆகிய ஊர்களையும் சோவியத் படைகள் கைப்பற்றின.

ஒபோச்சகாவை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 16.—ஜெர்மானியர், கள்காரட்னேவைக் காலி செய்தனர். குஸ்நெட்சோவ்கா, போட்ஜெல், பெரஸா கர்புஸ்கயா, யாநே, பெலிஹனி, முதலிய 300 இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்திய தரைக் கடல் பகுதி.

ஜூலை 12.—மியோன், மோரா, ம்யூசிக்ரானே, மான்டி பாப்ரி ஆகிய கிராமங்களை இந்தியப் படைகள் கைப்பற்றின.

படைகளைப் பார்வையிடும் பொருட்டு காஷ்மீர் மகாராஜா இத்தாலி வந்து சேர்ந்தார்.

ஜூலை 13.—லேயடிக்காவை 5-ம் படை கைப்பற்றியது.

ஜூலை 14.—பொக்கிபான்சி, மாண்டி சரக்தா மேரியா, மாண்டி சிவிடெல்லா, சான்குமிஞானே ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 16.—அரெஸ்ஸோ மாண்டிலிக்ஞஜே-என்னுமிடங்களை 8-ம் படை கைப்பற்றியது. குப்பியோ, காஸ்டாக்சியாரோ, காஸ்டெல்லினு, மெரரோனு, பாக்னி-டி-காக்கூஷியானு ஆகியவற்றை நேசப்படைகள் கைப்பற்றின.

ஜூலை 17.—ஆர்னே ஆற்றை நேசப் படைகள் கடந்தன. சீனுடெல்லா, பஜடியா, அஞானே, அம்பரா, லிப்பியானே, லோரென்சனு ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஜூலை 12.—நார்மண்டி போராட்டம் புதிய பகுதிகளிலும் பரவியது. அங்கோவில்லா சுர் ஏ, லாபோர்டோன்னெரீ ஆகிய கிராமங்களை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

யூகோஸ்லாவிய முதன் மந்திரி டாக்டர் ஐவான் தன் பெயராலும் மன்னர் பீட்டரின் பெயராலும், நாட்டின் மீட்சிப் போராட்டத் தலைவராக மார்ஷல் டிட்டோவை ஒப்புக்கொள்ளுவதாக அறிவித்தார்.

ஜூலை 14.—ஹிபெர்ட் துறை முகத்திற்குள் அமெரிக்கப் படைகள் புகுந்து விட்டன. லெஸ்ஸேக்கு 2 மைல் தூரத்திற்குள் நேசப் படைகள் வந்து புகுந்து விட்டன ; வெஸ்லி கிராமத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

ஜூலை 15.—போவாய் லாயோக்டெய்னரீஸ், லாலோண்டி ஆகிய இடங்கள் கைப்பற்றப்பட்டன.

ஜூலை 16.—எஸ்குவேயை பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றின.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜூலை 12.—லெய்யாங்குத் தெற்கேயிருந்த ஜப்பானியப் படைகள் அடியோடு அழிக்கப்பட்டன. லிலிங்குக்குள் எதிரிப் படைகள் நுழைந்தன.

10,000 யுத்தக் கைதிகளுக்கு அதிகமாக அமெரிக்கர்கள் கைப்பற்றினுர்கள்.

செய்பான் போராட்டத்தைக் குறித்துப் பேசிய அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஜேம்ஸ் போரெஸ்டால், ஜப்பானியப்படையினரில் 100-க்கு 95 பேர்கள், அதாவது 19,000 பேர்கள் கொல்லப்பட்டார்களென்றும், எறக்குறைய 1,000 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன வென்றும் அறிவித்தார்.

ஜூலை 13.—நியூ கினியைச் சேர்ந்த எய்டேப்-வீவாக் பகுதியில் 45,000 பேர்களைக் கொண்ட ஜப்பானிய 18-ம் படை சிக்கிக் கொண்டது. ஜூலை மாதம் 7-ம் தேதி இரண்டு ஜப்பானிய கப்பற் படைத் தலைவர்கள் இறந்து விட்டதாகத் தெரிகிறது. இவர்களுள் ஒருவர் சூச்சி நகுமோ. இவர் மத்திய பசிபிக் படைத் தலைவர். மற்றொருவர் அட்மிரல் யானே. வைஸ் அட்மிரல் நிச்சி ஹசிகவாவும் கூட போர் முனையில் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

ஜூலை 16.—ஜூன் 23-ம் தேதி முதல் ஜூலை 14-ம் தேதி வரை ஹெங்யாங்கைக் கைப்பற்ற முயற்சித்த ஜப்பானியருள் 14,000 பேர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஜூலை 17.—ஜப்பானிய கப்பற்படை மந்திரி அட்மிரல் ஷிக்கடரோ ஷிமடாவுக்குப் பதிலாக அட்மிரல் நோக்குன்னி நொமுரா பதவி எற்றுர்.

வானொலி நாட் குறிப்புகள்.

24—7—44 திருச்சி மாலை 7-15—"திருட்டு விற்பனையை ஒழிக்க"—பேராசிரியர் எ. இருதயசாமி ரெட்டியார்.
25—7—44 சென்னை மாலை 7-00—"யுத்த விமர்சனம்."
26—7—44 ஷை ஷை 7-00—"யுத்த முயற்சி."
27—7—44 திருச்சி மாலை 2-05—"பங்கீடு"—திருச்சி உதவிப் பங்கீடு அதிகாரி மிஸ்டர் எ. மார்க்கண்டவேல் ராஜா.
28—7—44 சென்னை மாலை 7-00—"வெற்றி வீரர்களுக்கான சேமிப்பு."
29—7—44 திருச்சி மாலை 7-15—"அச்சுக் கூட்டாளிகள் திண்டாட்டம்"—பேராசிரியர் தாமஸ் சீனிவாசன்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.